524,000 வாசகர்களுடன் முதல் இடம் வகிப்பது

ஞாயிறு நண்பன்

Malaysia Nanban 15 ஆகஸ்ட் 2021



தெலுங்கில் நடிக்கும் அஞ்சலி

பக்கம் S12



மலேசியா உட்பட உலகை வாட்டி வதைக்கும்கோவிட்-19

# என்று தணியும்? எப்போது முடியும்?

## அமெரிக்காவில் இருந்து மலேசிய பேராசிரியர் முனைவர் கலைமதி விவரிக்கிறார்

(எம்.இராஜன்)

**எந்த ஊசி நல்ல ஊசி என்பதல்ல; மறவாமல், தவறாமல் தடுப்பூசி போடுங்கள்!**

**முகக் கவசமும் பாதுகாப்பு அம்சங்களுமே நமது உயிர்காக்கும் அம்சங்கள்!**

**அலட்சியம், பாராமுகத்தால் மரணத்தோடு விளையாடாதீர்கள்!**

மலேசியா உட்பட உலகை வாட்டி வதைக்கும் கோவிட்-19 என்று தணியும்? எப்போது முடியும்? என்று கணிக்க முடியாது. நீராவி போல அது கலைந்து போய்விடும் என்று எண்ணவும் முடியாது என்று கூறுகிறார் மலேசியாவில் பிறந்து வளர்ந்து தற்போது அமெரிக்காவில் புளோரிடா நுண்ணுயிரியல் துறையில் பேராசிரியராக விளங்கும் முனைவர் க.கலைமதி.

தொற்றுநோய் என்பதற்கு ஒரு காலவரையறை கிடையாது. ஆனால் அதற்கு எதிரான நமது விழிப்புணர்வும் பாதுகாப்பும் மட்டுமே இந்த கொடிய ஆபத்தில் இருந்து நம்மை காத்துக்கொள்ள முடியும் என்றார் அவர்.

### முகக் கவசங்கள் உயிர்க்கவசங்கள்

முகக் கவசமும் நமது பாதுகாப்பை உறுதி செய்யும் நிரந்தர செயல்பாட்டு விதிமுறைகளை கண்டிப்பாக 100 விழுக்காடு அனுசரித்து இந்த நோய் நச்சுயிரிகள் நம்மை அண்டாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் வழி.

உடலின் எதிர்ப்பாற்றலை பெருக்கிக்கொள்ள குறிப்பாக மலேசிய மக்கள் தவறாமல் தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டும். மலேசிய மக்களில் ஒரு மூன்றாவது பெரிய சமூகமாக விளங்கும் இந்திய சமுதாயமும் இதற்கு விதிவிலக்கல்ல. தவறாது, மறவாது தடுப்பூசியை போட்டுக்கொள்ளுங்கள். எந்த தடுப்பூசி என்பது கேள்வியல்ல என்றார் அவர்.

நாடு ஒவ்வொரு நாளும் கோவிட்-19 பெருந்தொற்றின் கோரத்தாண்டவத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. 20,000க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு மிக அண்மையில் மரணங்கள் 360க்கு உயர்ந்துவிட்ட நிலையில் இந்த துறையில் சிறந்த நிபுணராகவும் ஆய்வாளராகவும் விளங்கும் முனைவர் கலைமதி நமது கேள்விகளுக்கு பதில்களை தந்தார். அவை வருமாறு:

**கே: கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நீடிக்கும் இந்த கோவிட்-19 எப்போது முடிவுக்கு வரும்? உங்கள் மருத்துவ ஆய்வுக் கணிப்பில் உலகம் இதிலிருந்து விடுபடும் நாள் எப்போது?**

**கலை:** பெண்டமிக் எனப்படும் ஒரு பெருந்தொற்றுக்கு ஒரு கால நிர்ணயத்தை நாம் நிர்ணயிக்க முடியாது. கொதிக்க வைக்கும் தண்ணீரிலிருந்து எழும் நீராவி போல ஒரு கட்டத்தில் இது காணாமல் போய்விடும் என்று நினைப்பது ஒரு கற்பனையாகவே விளங்கும்.

நோய்த்தொற்றில் மக்கள் பாதிக்கப்படும் நாள் வரை இந்த பிணி மாறாது. இதிலிருந்து நாம் மீள்வதற்கு ஒரே வழி இந்த உயிர்க்கொல்லி நச்சுயிரிகளுக்கு எதிராக கவசங்களால் நம்மை தற்காத்து கொள்வதுதான். உலகநாடுகளை போலவே மலேசியாவும் நிரந்தர செயல்பாட்டு விதிமுறைகளை கொண்டு வந்துள்ளது. இதை அனைவரும் கண்டிப்பாக 100 விழுக்காடு பின்பற்ற வேண்டும்.

1. முகக் கவசம் அணிதல். (இது மிக முக்கியம்) முகக் கவசத்திற்கு மேல் கண்ணாடித் திரையை அணிந்து கொள்வதும் அதிக பாதுகாப்பானது.

2. சோஷியல் டிஸ்டென்சிங் என்பதை சமூக இடைவெளி என்கிறார்கள். என்னைக் கேட்டால் இது ஒரு தோழமை இடைவெளி என்று சொல்வேன். யாரிடமும் நாம் வேண்டும் என்றே விலகி நிற்கவில்லை. ஒரு தோழமை புரிந்துணர்வோடு அவர்களின் நலத்திற்காகவும் நமது நலத்திற்காகவும் விலகி நிற்கிறோம். இதை பின்பற்ற வேண்டும்.

3. சுத்தம், சுகாதாரத்தை பேணுதல். எங்கு சென்றாலும் முதலில் நமது உடலை குறிப்பாக கைகளை முதலில் சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். கைத்தூய்மியை பயன்படுத்த வேண்டும். நாம் வாழும் குடியிருப்பையும் சுற்றுச்சூழலையும் சுத்தமாக சுகாதாரமாக பேணிக்காக்க வேண்டும்.

ஏதோ கடமைக்காக இதை செய்யாதீர்கள். அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாக, ஒரு பழக்கமாக இதை மாற்றுங்கள்.







கோப்புப் படங்கள்

### எந்த ஊசி நல்ல ஊசி

**கே: மலேசியாவில் மக்களுக்கு பல்வேறு வகை தடுப்பூசிகள்போடப்பட்டுள்ளன.இந்ததடுப்பூசிகள் குறித்து ஒரு மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இதில் எந்த ஊசி நல்ல ஊசி?**

**கலை:** மலேசியாவில் 5 வகை ஊசிகள் தருவிக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஃபைசர், சினோவாக், கொன்வேடெசியா, ஸ்புட்னிக் வி, அஸ்ட்ராஜெனேகா ஆகியவை அவைகளாகும்.

எனினும் ஃபைசர், சினோவாக், அஸ்ட்ராஜெனேகா பரவலாக மக்களுக்கு செலுத்தப்பட்டிருக்கிறது.

ஃபைசர் - தூது மரபணுவை (எம்ஆர்என்ஏ) நேரடி தடுப்பூசியாக வழங்குகின்றன.

சினோவாக்- கொரோனா வைரஸ் எனப்படும் முழு மணிமகுட தீ நுண்மத்தை செயலிழக்க வைத்து தடுப்பூசியாக வழங்குகின்றனர்.

அஸ்ட்ராஜெனேகா உட்பட ஸ்புட்னிக் வி போன்ற தடுப்பூசிகள் ஸ்பைக் புரதத்தின் மரபணுவை மற்ற ஒரு துன்பமும் தராத தீ நுண்மத்தில் செலுத்தி தடுப்பூசியாக வழங்குகின்றனர்.

எந்த ஊசி நல்ல ஊசி என்பதல்ல. ஒவ்வொரு தடுப்பூசியையும் 2 முறை எடுக்க வேண்டும். 2ஆவது ஊசியை 3 வாரங்களுக்கு பிறகு செலுத்திக் கொள்ள வேண்டும். முதல் ஊசியினால் எதிர்ப்பாற்றல் 2 வாரத்திற்கு வலுப்படும். 2 ஆவது ஊசிக்கு பின்னர் முழுமையான எதிர்ப்பாற்றல் ஏற்படும் என்பது ஆராய்ச்சியின் வழி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி பக்கம் S11

## யார் இந்த முனைவர் கலைமதி?

### ஈப்போவில் இருந்து அமெரிக்கா வரை



ஈப்போவில் அரசினர் தமிழ்ப்பள்ளியில் கல்வி கற்று, நுண்ணுயிரியல் மருத்துவ ஆய்வுத் துறையில் கற்றுத் தேர்ந்தவர் முனைவர் க.கலைமதி ஆவார். தற்போது அமெரிக்கா மியாமியில் உள்ள புளோரிடா அனைத்துலக பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணி புரிகிறார்.

பலதடைகளை தாண்டி உழைத்து, மிகவும் புகழ் பெற்ற அமெரிக்க நுண்ணுயிரியல் கழக உறுப்பினராக அவர் விளங்குகிறார். மலேசியாவிலிருந்து இது வரை தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்களில் முதல் பெண் உறுப்பினர் இவரே ஆவார்.

நாடறிந்த ஈப்போ தமிழறிஞர் மறைந்த தமிழ்க்குயிலார் கலிய பெருமாளின் 2 ஆவது புதல்வி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. நுண்ணுயிரியல் குறித்து ஆய்வுக்கட்டுரைகளையும் 120க்கும் மேற்பட்ட அறிவியல் கட்டுரைகளையும் படைத்தவர்.

உலகளாவிய நிலையில் விரிவுரைகளையும் வழங்குகிறார். கடந்த 2014 ஆம் ஆண்டு அனைத்துலக அளவிலான நியூ இங்கிலாந்து பயோ லேப்ஸ் அறிவியல் பேராளர் விருது இவருக்கு வழங்கப்பட்டது. இன்னும் பல சிறப்புகளும் விருதுகளும் பாராட்டுகளையும் அவர் பெற்றவர்.

# மீண்டும் உதவி தொகை கிடைக்குமா பிரதமர் அரசு உதவிடுமா?





நாட்டில் பொருளாதார மந்த நிலை வேலை இல்லா பிரச்சினையால் மக்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர் அரசாங்கம் அறிந்த உண்மை.

வீட்டு கடன் முறையாக குறிப்பிட்ட மாதம் தேதியில் செலுத்த முடியாத இக்கட்டான சூழ் நிலையில் மக்கள் பல் வேறு இடர் பாடுகளை சந்தித்து வருகின்றனர்.

இதற்கிடையில் மக்களின் அடிப்படை நலனில் அக்கரை கொண்டு அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத் திற்கு ஊன்று கோலாக பக்க பலமாக உயிர் நாடியாக விலங்க வேண்டியது மக்க ளால் தேர்வு செய்யப்பட்ட அரசாங்கம் தொடர்ந்து துணை வரவேண்டும்.

வங்கியில் பல ரூபங்களில் கடன் பெற்று கோவிட்-19 வைரஸ். வருகையால் வருமானமின்றி.

பெற்ற கடனை அடைப்பதற்கு திக்கு முக்க ாடுகின்ற சூழ் நிலையை எதிர் நோக்கி வருவதை அரசாங்க அதிகாரிகள் முதல் பிரதமர் வரை அறிவார்கள்.

வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு அதன் சந்தா தாரர்களுக்கு வட்டி விகிதம், முடிந்தால் இன்னும் குறைக்கப் படும் சாத்தியம் இருக்க வேண்டும்.

வீட்டு கடன் பெற்றவர்களிடம் குறைந்த வசூல் பெறவேண்டும்.

மாதத் தவணை பணத்தை அரசாங்கம் குறைக்க வேண்டும் வங்கிகளுக்கு கடன் வசதி குறைந்த தொகை செலுத்த அரசாங்கம் புதிய வரவு செலவு கணக்கில் வாய்ப்புகளை ஏற்படுத்தி தருமா?

எண்டர் பிரைஸ் சிறு தொழில் செய்கின்றவர்களுக்கு 3,000 வெள்ளியை கொடுத்து உதவிட முன் வரவேண்டும்.

மக்களின் அடிப்படை நலனில் நடப்பு பிரதமர் மொகிதீன் துணை வருவாராக.

**- எஸ்.மனேகரன். போர்ட்டிக்சன்.**

# கொரோனாவின் ஆனந்த தாண்டவம்

எனக்கு எத்தனை வயதானாலும் என்ன பதவிதான் முக்கியம் அதற்காகத்தானே புதுகட்சி யை ஆரம்பித் தேன் என்று பழைய பல்லவி ஒன்று. என்னை விட்டால் போதும் நான் வகிக்கும் பதவியை குத்திக் கிளற இத்தனை அமைச்சர்களா ஐயோ கட்சியா பதவியா? என்று அலறித் துடிக்கும் அமைச்சர்கள்

அரசியலே ஆட்டம் கண்டிருக்கும் இவ் வேளையில் ஓட்டுப் போட்டு தேர்ந்தெடுக்க ஒரு நல்ல அமைச்சர் கிடைக்க வில்லையே என்று நாளும் தெரிந்த மக்கள் தவிப்பு ஒரு பக்கம் நீங்களெல்லாம் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் இந்த உலகத் தையே நான்தான் ஆள வேண்டுமென்று என்னை அனுப்பியவன் கொரோனா என்று அழகான பெயர் சூட்டி உலக வர்த்தகத்தையே தன் கைக்குள் போட்டுக்கொள்ள எல்லா நாட்டிற்கும் என்னை அனுப்பிவைத்து. ஒரு நாளைக்கு எத்தனை உயிர்களை தின்று தீர்க்க முடியுமோ தீர்த்துக்கட்டு என்று பின்னாலேயே மருந்தும், ஊசியும் அனுப்பி நல்ல பெய ரோடு உலக வர்த்தகத்தை பெருக்கி வரும் என் நாட்டுக் காரனுக்கு நன்றி சொல்கிே றன். போன தலைமுறையில் போதிதர்மன் என்ற ஒரு சுத்த தமிழன் அவருடைய சித்தவைத்தியத்தால் எங்களை கொன்று குவித்தான். எங்கள் நாட்டு விஞ்ஞானிகளின் ஒத்து ழைப்பால் மீண்டும் உயிர் பெற்று பக்கத்து நாடான இந்தியாவை கன்னம் வைத்து தாக்கி, இன்று உலகையே ஆக் ரோசமாய் வலம் வருவ தோடு செவ்வாய் கிரகத் திற்கும் போய் அங்கு பல யுக்திகளை கையாளப் போகிறேன்.

இந்த உலகில் என்னை அழிக்க எத்தனை மருந்துகள், ஊசிகள், முகக் கவரிகள் தற்கொலைகள் (Killbac+s Hand Sanitiz-er) இத்தனையும் தாண்டி நான் சூராவளியாய் சுற்று கிறேன். மிக மிக வசதியான இடம் கொடுக்கிறீர்கள். நான் ஆனந்த தாண்டவம் ஆடுகிறேன்.

**-மு.சரோஜினி பாலகிருஷ்ணன், சுங்கை பூலோ.**

இதயம் பேசுகிறது

'இதயம் பேசுகிறது' பகுதிக்கு தங்கள் குறைநிறை கடிதங்களை mnanbansunday@gmail.com மின்னஞ்சல் வழியாகவும், தொலைநகல் (03-62591617) வழியாகவும் வியாழக்கிழமைக்குள் அனுப்பி வையுங்கள்.



# புதிய அத்தியாயத்தின் வழி கல்வி கற்றல்

நீண்ட இடைவெளிக்கு பிறகு பள்ளிகள் திறக்க அரசாங்கம் உத்தேசி த்துள்ளது வரவேற்க கூடியதாக இருந்தாலும் தங்களின் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி வைக்கும் மன நிலையில் பெற்றோர் இல்லை என்பதை சில தரவுகள் காட்டுகின்றன. கோவிட் -19 நோய்த்தொற்று இன்னும் முழுமையாக விடுபடாத நிலையில் இது சாத்தியபடுமா என்றும் தெரிய வில்லை.

சின்னச்சின்ன சீண்டல்கள், சிணுங்கல்கள், குறும்புத்தனங்கள் இல்லாத வகுப்பறைகள்.

'வீட்டில் இருந்தே இயங்கலை வழி பிள்ளைகளுக்கு பாடங்களை போதியுங்கள் என்ற அரசாங்கத்தின் உத்தரவை ஆசிரியர்கள் அனுசரிக்கிறார்கள். இயங்கலை, புலனம், கைத்தொலைப்பேசி, கணினி என ஒரு புதிய தொழில் நுட்ப பரிணாமத்தின் வழி வகுப்பறைகள் வீட்டுக்குள் முடங்கியிருக்கிறது. கல்வி கற்றலில் ஒரு புதிய அத் தியாயத்தின் தொடக்கமாக கல்வியை கற்கும் அனுபவம் அவ்வேளையில் ஆசிரியர்களின் நேரடி பார்வையிலிருந்து விலகி நின்று நழுவியோடும் மாணவர்கள் செய்யும் விளையாட்டுத்தனங்கள் கூட ஆசிரியர்களுக்கும் இன்ப அதிர்வலைகளை ஏற்படுத்தும் நிலை குறித்து 'இயங்கலை இனிய அனுபவமா? இதயச்சிறையா? எனும் கட்டுரைகளை படைத்த முனைவர் குமரன் வேலுக்கு பாராட்டுகள்.

ஒரு மையப்புள்ளியில் கலை வடிவத்தின் அடையாளமாய் ஒரு சிறு சம்பவ கோர்வையை முன்னிலைப்படுத்தி கதைக்களம் அமைத்திருக்கும் விதம் சிறுகதைக்குரிய புதிய அணுகுமுறை. சிறுகதை இப்படித்தான் சின்ன சம்பவங்களின் உள்வாங்கலை பிரதிபலிக்கும் விதமாக அமையவேண்டும் என்பதற்கு நல்ல உத ாரணம் 'உனக்கு நீயே உதவி' எனும் சிறுகதை பா.ஜீவிதாவுக்கும் பாராட்டுகள்.

'வெள்ளித்திரையின் முழு நிலவு' நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் பற்றிய தேடல் இன்னும் நிறைவாக சொல்லி இருக்கலாம் என்பது அடியேனின் விருப்பம்.

**ஆர்.எம்.சந்திரன், பாங்கி.**

## விவாகரத்து பெருகுவதற்கு காரணம் ஆண்களா? பெண்களா?



திருமணம் என்பது சொர்க்க த்தில் நிச்சயிக்கப்படுகிறது என்பார்கள். ஆயினும் இத் திருமணம் பூமியிலேயேதான் நிச்சயிக்கப்படுகிறது, பூமியிலேயேதான் நடக்கிறது. இவ்வாறான திருமணங்கள் இக்கால கட்டத்தில் விவாகரத் தில் முடிவதற்கு ஆண்களும் பெண்களுமே காரணம்.

வரட்டு கௌரவமும் இதற்கு காரணம் எனலாம். இன்றைய நிலையில் ஆண்களுக்கு நிகர் பெண்களும் வருமானத்தை ஈட் டுகிறார்கள். சுய கௌரவத்தை ஆண்களும் பெண்களும் விட்டுக் கொடுப்பதே இல்லை ஆகவே கருத்து மோதல்களும் இங்கு தவிர்க்க முடியாதவையாகவே அமைந்து விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் விவாகரத் தும் ஏற்படுகிறது. இதில் இருபாலரும் அடங்குவர்.

இந்த விவாகரத்தினால் பாதிக்கப்படுபவர்கள், அவர்கள் பிள்ளைகள்தான் ஆண்களோ பெண்களோ தன் பிள்ளைகளை நினைப்பதற்கு கூட நேரம் இல்லாமல், தங்களின் சொந்த முடிவினையைப் பற்றியே மட்டும் தான் சிந்தித் திருப்பார்கள். யார் வந்து மூளைச் சலவை செய்தாலும் அதனை ஏற்க மறுக்கிறார்கள்.

காதலித்தவர்களோ அல்லது பெற்றோர்கள் பார்த்த வரனோ, கண்டிப்பாக திருமணத்திற்கு முன்பு திருமணப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ள மனவலிமை, நல்ல ஆற்றல் மூலமாக இந்த விவாகரத்தை த்இருபாலரும் தவிர்க்கலாம்.

**-சுந்தரேசன் முத்து, தாமான் ஸ செந்தோசா, கோலாலம்பூர்.**

## நொடிக்கு நொடி



கைவிரல் நொடித்த கணப் பொழுதில் காரியமாற்றிய இவ்வுலகம் கொரோனா பேரலையால் நொடிப் பொழுதில் நொடித்துப் போனது, இறுதி காரியம் செய்ய எஸ்.ஓ.பிக்கள், தடுக்கி விழுந்த இடத்தில் எல்லாம் தடித்த வாதங்கள் செய்தவர்கள் இன்று வீட்டினுள் மௌனமானார்கள், தடி ஊன்றிய கிழவரும் கிழவியரும் கூட வீதிகளில் இல்லை.

அழுது வீங்கிய கன்னங்கள் போதாது என பண வீக்கம் என்னும் போர்வைக்கு வெளியில் குத்தாட்டம் போடும் விலைவாசிகள், குத்தவைத்த பெண்ணுக்கு உறவைக்கூட்டி சடங்குகள் செய்ய சாத்தியமில்லை, குற்றாலத்து குளிர்ச்சி இங்கில்லை, மத்தாளத்தை தட்டிப்பாட இங்கு மகிழ்ச்சி இல்லை. பட்டாளத்து விறைப்புடன் பட்டையை கிளப்பியவர்கள்.

பட்டணத்தில் இப்போது யாருமில்லை, சுட்டெரிக்கும் சூரியன் கூட சுமார்தான். பட்டையை உறிக்கும் கொரோனாவின் முன்னால், வணங்காமுடி டேவிட்டும் கோவிட்டுக்கு வணக்கம் சொல்லும் காலம். நம்பிக்கையுடன் காத் திருப்போம் மீண்டும் வரும் பொற்காலம்.

**-சிவமணிமுரு, அம்பாங்.**

முதல் பக்கத் தொடர்ச்சி

# கோவிட்–19 என்று தணியும்?

பக்கவிளைவுகள் வருமா? பாதிப்புகள் வருமா?

கே: தடுப்பூசிகள் குறித்து மக்களிடையே தொடர்ந்து அச்சமும் சந்தேகமும் நிலவுகிறது. இதனால் பாதிப்பு வருமா? பக்கவிளைவுகள் நீடிக்குமா?

கலை: தடுப்பூசியினால் பக்கவிளைவுகள் வருவது அபூர்வமானது. அதனால் பெரும்பாலோருக்கு எதுவுமே ஏற்படாது. தடுப்பூசி செலுத்தப்பட்ட பிறகு 1. சோர்வு, 2, சிறு வீக்கம், 3. தலைவலி, 4. தசைவலி, 5. காய்ச்சல், 6. உடல்குளிர்ச்சி ஏற்படலாம். இது சில நாட்கள் நீடிக்கும். மற்றபடி எந்த பாதிப்பும் வராது. சந்தேகம் வேண்டாம். அச்சம் கருதி தடுப்பூசி போட்டுக்கொள்வதை யாரும் தவிர்த்து விடக் கூடாது. அதுதான் முக்கியம்.

கே: அண்மைய காலமாக டெல்டா பிளஸ் என்ற நச்சுயிரி பல நாடுகளில் ஊடுருவியிருக்கிறது என்றும் மலேசியாவிலும் அதன் ஊடுருவலால் பாதிப்பு அதிகமாகிறது என்றும் தகவல்கள் கூறுகின்றன. இதன் அபாயம் என்ன? எந்தெந்த வகை நச்சுயிரிகள் உலவுகின்றன?

கலை: ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். சார்ஸ்கோவ் -2 என்ற மணிமகுட தீ நுண்ம நச்சுயிரிதான் பிரதானமானது. இதிலிருந்து மரபணு மாறி வீரியம் கொள்கின்ற நச்சுயிரிகள்தான் வெவ்வேறு வகைப்படுகின்றன.

இங்கிலாந்தில் இருந்து ஆல்பா நச்சுயிரியும் பிரேசிலில் இருந்து காமா நச்சுயிரியும் இந்தியாவில் இருந்து டெல்டா நச்சுயிரியும் பரவி இருக்கிறது என்று மருத்துவ உலகம் கண்டுபிடித்திருக்கிறது.

இதில் டெல்டா என்ற நச்சுயிரி மிக ஆபத்தானது என்பதை மறுப்பதற்கில்லை. அதுமிக வேகமாக பரவுகிறது. ஒருவரின் உடலில் தொற்றி 2,000 எக்ஸ் என்ற அது அதிவேகத்தில் பரவுகிறது. ஒரே நேரத்தில் அதிகமானோரை தாக்கும் கொடிய நச்சுயிரி இது.

கோவிட்-19 என்ற அடிப்படை நோய் பாதிப்பில் எந்த மாற்றமும் இல்லை. நச்சுயிரிகள் வீரியம் பெறுகின்றன.

அறிகுறியே இல்லாத பாதிப்பு ஏன்?

கே: அறிகுறியே இல்லாமல் பலருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று ஏற்படுகிறது. திடீர் மரணங்களும் ஏற்படுகிறது. இது ஏன்? எப்படி?

கலை: சுமார் 15 லிருந்து 50 சதவீத மக்களுக்கு சார்ஸ் கோவ் -2 என்ற மணிமகுட தீ நுண்ம நச்சுயிரி தொற்றும்போது அவர்களின் உடலில் உள்ள நோய் எதிர்ப்பாற்றல் சக்தி வாய்ந்ததாக இருப்பதால் அவர்களுக்கு இந்த அறிகுறிகள் தெரிவதில்லை. என்றாலும் அவர்களையும் இது பாதிக்கும் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இருதய பாதிப்பு, உடல்பருமன், வயதானவர்கள், மற்றும் உடல்நலக்குறைவுக்கு உள்ளானவர்கள் இதில் மிக மிக கவனமாக இருக்கவேண்டும். திடீர் மரணம் ஏன் ஏற்படுகிறது என்று கேட்கிறீர்கள். நோய்த்தொற்றோடு இருதய கோளாறு உள்ளவர்களுக்குத்தான் இந்த திடீர் மரணம் ஏற்படும் என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

கே: மலேசியாவில் மக்கள் தொகையோடு ஒப்பிடும்போது பாதிப்பு எண்ணிக்கையும் மரண எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. இதை தடுப்பதற்கு ஒரு மருத்துவ ஆய்வாளராக உங்கள் பரிந்துரைகள் எதுவாக இருக்கும்? உங்கள் ஆலோசனைகள் என்ன?

கலை: தனியாக நான் பரிந்துரைகளை சொல்ல வேண்டியதில்லை. அரசாங்கம் வழங்குகின்ற ஆலோசனைகளை , பாதுகாப்பு வழிமுறைகளை, நிரந்தர செயல்பாட்டு விதிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுங்கள்.

மலேசியாவில் மட்டும் அல்ல. உலகளாவிய மக்களுக்கே வந்துள்ள மிகப் பெரிய இதுவரை காணாத மிகப் பெரிய நச்சுயிரி பேரிடர் இது. தடுப்பூசி... தடுப்பூசி...தடுப்பூசி என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள். முகக் கவசங்கள்உங்கள் உயிர்க்கவசங்கள். முன்பே சொன்னதை போல சுகாதாரத்தை பேணுங்கள். உடல் எடையை குறையுங்கள் என்பதுதான் நான் வழங்கும் பொதுவான ஆலோசனை.

இது நமது வாழ்க்கையின் நிரந்தரமா?

கே: கடைசியாக ஒரு கேள்வி, இந்த கோவிட்-19 தரும் எதிர்கால சவால்கள் என்ன? இது நமது வாழ்வின் ஓர் அங்கமாகி விடுமா? இதனுடன் நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டுமா?

கலை : கோவிட்-19 என்பது விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவியது. நாம் சுற்றுச்சூழல் அமைப்பை சீர் குலைக்கும்போது வன விலங்குகள் மனிதர்களை நெருங்குகின்றன. எனவே இந்த தொற்று நோய்களை தவிர்க்க முடியாது. என்னென்ன சவால்கள் ஏற்படும் என்று கேட்கிறீர்கள்.

1. பருவநிலை மாற்றம் நிலைமையை மோசமாக்கும்.

2. கோவிட்-19 நோய்த்தொற்றால் பொருளாதார நெருக்கடியும் வறுமையும் அதிகரிக்கும்.

3. தென் ஆசியாவில் மட்டும் 55 லட்சம் மக்கள் வறுமையின் பிடிக்கு தள்ளப்படுவார்கள் என்று கணித்திருக்கிறார்கள்.

இதையெல்லாம் ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு விழிப்புணர்வு, பாதுகாப்பு, விதிமுறைகளை பின்பற்றி இந்த துன்பத்தில் இருந்து அனைவரும் மீண்டு வருவோம். மீண்டும் எழுவோம்.

இவ்வாறு முனைவர் கலைமதி மலேசிய நண்பனுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டார்.

3ஆம் பக்கத் தொடர்ச்சி

# எது உண்மை...

இந்த பெருங்கடல் நீரோட்டம் வழியாக ஒரு நொடியில் கடந்து செல்லும் நீரின் அளவு உலகெங்கும் உள்ள ஆறுகள் அனைத் திலும் ஒரு நொடியில் கடந்து செல்லும் நீரின் ஒட்டுமொத்த அளவைவிட அதிகம் என்கிறது நேஷனல் ஓசியன் சர்வீஸ்.

கரீபிய கடல்பகுதி 15ஆம் நூற்றாண்டில் இருந்தே கடற் கொள்ளை சம்பவங்களுக்கு பெயர் பெற்றது. தென் அமெரிக்கா, வட அமெரிக்கா மற்றும்ஐரோப்பிய நாடுகள்இடையிலானசரக்குகப்பல்போக்குவரத்து இந்த பகுதி வாயிலாக இன்றும் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. கடல் கொள்ளையர்களால் இந்தக் கப்பல்கள் தாக்கி அழிக்கப்பட்டிருக்கவும் அதிக வாய்ப்புண்டு.

முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர் காலகட்டங்களில் இந்த பகுதியில் காணாமல் போனதற்கு காரணம் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களே என்றும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. 2018 யூ.எஸ்.எஸ். சைக்லோப்ஸ் கப்பலும் இத்தகைய ஒரு தாக்குதல் காரணமாகவே மூழ்கி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது அமெரிக்க அரசு கூறுகிறது.

இந்தப் பகுதியில் சூறாவளியின் தாக்குதல் நிகழ்வது மிகவும் இயல்பானது. 1502 ஆம் ஆண்டு ஸ்பெயினுக்கு சொந்தமான கடற்படைக் கப்பல்கள் இம்மாதிரியான சூறாவளி ஒன்றில் இந்தப் பகுதியில் பேரழிவுக்கு உள்ளானது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. பெர்முடா முக்கோணம் அமைந்துள்ள பகுதியில் சூறாவளியின் காரணமாக பேரழிவுகள் நிகழ்வதற்கான வரலாற்று ஆவணங்கள் மற்றும் செய்திகள் ஏராளமாக உள்ளன.

கப்பல் அல்லது விமானத்தை இயக்கியவர்கள் செய்த தவறு, சாகசம் செய்வதற்காக சூறாவளியின் அருகே கப்பல் அல்லது விமானத்தை செலுத்தும் போது உண்டான விபத்துகளால் ஏற்பட்ட இழப்புகள் ஆகியவையும் பெர்முடா முக்கோண பகுதியில் நடக்கும் சம்பவங்களுக்கு காரணமாக உள்ளன என்று ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது.